மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.302/2017</u>

2025ம் ஆண்டு அக்டோபர் 22ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சண்முகம் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>22.10.2025 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. தாவா சொத்துக்கள் ஆதியில் ஒரு ராமசாமி கவுண்டர் என்பவரின் மக்கள், ராமசாமி கவுண்டர் பழனிச்சாமி கவுண்டர் மற்றும் ஆறுமுகசாமி கவுண்டர், ஆகியோர்களுக்கு பாத்தியமாக இருந்தது என்றால் சரிதான். மூத்த மகன் ராமசாமி கவுண்டர் என்பவருக்கு வேலுசாமி கவுண்டர் என்ற மகன் உண்டு என்றால் ஆமாம். மேற்படி வேலுசாமி கவுண்டர் என்பவருக்கு தெய்வசிகாமணி மற்றும் சொர்ணாத்தாள் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான்.

2. மேற்படி வேலுச்சாமி கவுண்டரின் வாரிசான சொர்ணாத்தாள் தான் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். இந்த வழக்கில் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் வேலுச்சாமிக்கு என்ன உறவு என்றால் அவரின் மக்கள்தான். இந்த வழக்கின் 5ம் பிரதிவாதி குமாரசாமி ஒரு

ஆறுச்சாமி என்பவரின் மகன் என்றால் ஆமாம். நான் எதற்காக இந்த வழக்கை போட்டுள்ளேன் என்றால் தடத்தைப் பொறுத்து பிரதிவாதிகள் கம்பி வேலி போட முயற்சி செய்ததால் அதற்காக இந்த வழக்கை போட்டுள்ளேன். வழக்கு பாதையை பொறுத்து நீதிமன்ற ஆணையருடன் சென்று நான் பார்த்தேனா என்றால் இல்லை.

3. பிரதிவாதிகள் இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் பெற்று சர்வேயர் உதவியுடன் தாவா தடத்தை அளவீடு செய்து நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கை மற்றும் வரைபடம் ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். சர்வேயர் வரைபடத்தில் க.ச.எண். 51 க்கு கிழபுறம் தாவா பாதை தென்வடலாக ஆரம்பித்து பின்னிட்டு கிழக்கே திரும்பி புல எண்.41/1 க்கு வடபுறமாக, 41/3 41/4, 41/5, 41/6, 41/7 ஏ ஆகிய பூமிகளுக்கு வடபுறமாக கிழமேலாக செல்கிறது என்றால் சரிதான்.

4. க.ச.எண்.47 க்கு வடபுறமாக பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட கிழமேல் தடம் உள்ளது என்றால் சரிதான். அந்த தடமானது 4, 5 அடி உயரமாக உள்ளது என்றால் சரிதான். க.ச.எண்.45 க்கு வடபுறமாக நான் இந்த வழக்கில் கோரும் தாவா தடம் ஆனது 4, 5 அடி பள்ளத்தில் உள்ளது என்றால் சரியல்ல. ஏரி தடத்திற்கு வடபுறத்தில் உரம்பு வாய்க்கால் உள்ளது. ஏரித்தடத்திற்கு வடபுறத்தில் உரம்பு வாய்க்கால் மட்டும்தான் உள்ளது என்பதை பொறுத்து நான் நீதிமன்ற ஆணையரிடம் காட்டினேனா என்றால் காட்டினேன். புல எண்.45/2 பூமியை பொறுத்து எனது பெயரில் பத்திரமோ பட்டாவோ இல்லை

என்று சொன்னால் பட்டா உள்ளது. புல எண்.45/2 பூமியை பொறுத்து எத்தனை சென்ட் நிலத்தை பொறுத்து எனது பெயரில் பட்டா உள்ளது என்றால் 10 சென்ட் நிலத்திற்கு பட்டா உள்ளது.

5. அந்த பட்டா எப்போது யாரால் வழங்கப்பட்டது என்றால் கிரயத்தின் போது பட்டா வாங்கினேன் பட்டா அரசால் வழங்கப்பட்டது. மேற்படி 10 சென்ட் பூமிக்கு எனக்கு காங்கேயம் வட்டாட்சியரால் பட்டா வழங்கப்படவில்லை என்று சொன்னால் சரியா என்றால் ஆமாம். நான் ரீ.ச.எண்.47/1 காலையில் பிரதிவாதி பூமியில் பாதை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை நான் சொல்வது போல் எந்த பாதையும் பிரதிவாதி பூமியில் நிலையில் இல்லை என்றால் சரியல்ல உள்ளது. எத்தனை அடி தடம் உள்ளது என்றால் அது வண்டித்தடம் ஏரித்தடம். நான் சொல்வது போல் பிரதிவாதிகள் பூமியான ரீ.ச.எண்.47/1 பூமியில் எந்த தடமும் நிலையில் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

6. நான் சொல்லும் தடம் பிரதிவாதிகள் பூமியில் எந்த பக்கத்தில் உள்ளது என்றால் 47 காலையில் தடம் இல்லை. 45 காலையில் தான் தடம் உள்ளது. நான் இந்த வழக்கில் கோரியுள்ள தடமானது காலை எண்.45 தான் உள்ளது என்றால் ஆமாம். நான் இந்த வழக்கில் கோரியுள்ள தடம் காலை எண் 51 இல் வடபுறமாக கிழக்கிலிருந்து மேற்கு சென்று பின்பு தெற்கு திரும்பி வடக்கே க.ச.எண்.45/7 ஏ பூமியுடன் முடிவடைந்து விடுகிறது என்றால் ஆமாம்.

(ஆவணங்கள் பார்வையிட வேண்டுமென்ற பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.10.22 19:07:35 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்